புனித அன்னப்பறவை என்பதன் விளக்கவுரை

இன்று ஞானக்கடலாகிய தந்தை புனித அன்னப்பறவைகளின் குழுவைப் பார்த்துக் கொண்டிருக் கிறார். புனித அன்னப்பறவை என்றால் தூய்மை மற்றும் சிறப்புகளைக் கொண்ட ஆத்மாக்கள். தூய்மை என்றால் மனம்-சொல்-செயல், சம்பந்தம் அனைத்திலும் பவித்திரதா. பவித்திரதாவின் அடையாளமாக எப்போதுமே வெள்ளை நிறத்தைக் காட்டுகின்றனர். புனித அன்னப்பறவைகளாகிய நீங்களும் கூட வெண்ணிற ஆடையணிந்தவர்கள், தூய மனம், அதாவது தூய்மை சொரூபமாக இருக்கிறீர்கள். உடல்-மனம் மற்றும் இதயத்தால் சதா கறையற்ற வர்களாக, அதாவது தூய்மை யாக இருக்கிறீர்கள். சிலர் உடலால், அதாவது வெளிப்புறத்தில் எவ்வளவு தான் தூய்மையாக, மாசற்று இருந்தாலும், மனதால் மாசற்றவராக, தூய்மையற்றவராக இல்லை என்றால் முதலில் மனதைத் தூய்மையாக வைத்திரு எனச்சொல்வார்கள். மாசற்ற மனம் அல்லது மாசற்ற இதயத்தில் பிரபு திருப்தியடைவார். அதோடு மாசற்ற இதயம் கொண்டவர்களின் அனைத்து விருப்பங்களும், அதாவது ஆசைகளும் நிறைவேறும். அன்னப்பறவையின் சிறப்பு தூய்மை, அதாவது மாசற்ற தன்மை. அதனால் பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் புனித அன்னப்பறவைகள் என அழைக்கப் படுகிறீர்கள். சோதித்துப் பாருங்கள் -- புனித அன்னப்பறவை ஆத்மாவாகிய என்னுடைய நான்கு விஷயங்களிலும் அதாவது உடல்-மனம்-இதயம் மற்றும் சம்பந்தத்தில் தூய்மை உள்ளதா? சம்பூர்ணத் தூய்மை அல்லது பவித்திரதா இந்த சங்கமயுகத்திலேயே அனைவரின் லட்சியமாக உள்ளது. அதனால் தான் பிராமணரில் இருந்து தேவதை ஆகப்போகிற நீங்கள் சம்பூர்ணத் தூய்மையானவர் எனப் பாடப்படுகிறீர்கள். வெறும் நிர்விகாரி இல்லை, ஆனால் சம்பூர்ண நிர்விகாரி எனச் சொல்லப்படுகிறது. 16 கலைகள் நிறைந்தவர் எனச் சொல்லப்படுகிறது. வெறுமனே 16 கலைகள் எனச் சொல்வதில்லை, ஆனால் அதில் சம்பன்னம் (நிரம்பியவர்). மகிமையின் பாடல் உங்களுடைய தேவதா ரூபத்திற்குத் தான், ஆனால் எப்போது ஆவீர்கள்? பிராமண வாழ்க்கையிலா அல்லது தேவதா வாழ்க்கையிலா? ஆவதற்கான சமயம் இப்போது சங்கமயுகம். அதனால் சோதித்துப் பாருங்கள், எது வரை, அதாவது எவ்வளவு சதவிகிதத்தில் தூய்மை, அதாவது பவித்திரதாவை தாரணை செய்திருக்கிறோம்?

உடலின் தூய்மை என்றால் சதா இந்த உடலை ஆத்மாவின் கோயில் என உணர்ந்து, அந்த ஸ்மிருதி மூலம் தூய்மையாக வைப்பது. மூர்த்தி எவ்வளவு உயர்ந்ததோ, அவ்வளவு தான் கோயிலும் உயர்ந்ததாக இருக்கும். ஆக, நீங்கள் உயர்ந்த மூர்த்திகளா? அல்லது சாதாரணமானவர்களா? பிராமண ஆத்மாக்கள் முழுக் கல்பத்திலும் நம்பர் ஒன் சிரேஷ்ட ஆத்மாக்கள். பிராமணர்களுக்கு முன்னால் தேவதைகள் கூட தங்கத்திற்கு சமமானவர்கள் தாம், ஆனால் பிராமணர்கள் வைரம் போன்றவர்கள். ஆக, நீங்கள் அனைவரும் வைரத்தாலான மூர்த்திகள். எவ்வளவு உயர்ந்தவராகி விட்டீர்கள்! தன்னுடைய சுவமான் இவ்வளவு உயர்ந்ததென அறிந்து, இந்த சரீரம் என்ற கோயிலைத் தூய்மையாக

வைத்திருங்கள். சாதாரணமாக இருங்கள், ஆனால் தூய்மையாக இருங்கள். இந்த விதியின் மூலம் உடலின் பவித்திரதா சதா ஆன்மிக நறுமணத்தின் அனுபவம் செய்விக்கும். அத்தகைய தூய்மை, பவித்திரதா எது வரை தாரணையாகி இருக்கிறது? தேக உணர்வில் தூய்மை இருப்பதில்லை, ஆனால் ஆத்மாவின் கோயில் எனப் புரிந்து கொள்வதன் மூலம் தூய்மையாக வைத்திருக்கிறீர்கள். மேலும் இந்தக் கோயிலையும் பாபா உங்களுக்கு பராமரிப்பதற்காகவும் நடத்துவதற்காகவும் கொடுத்துள்ளார். இந்தக் கோயிலின் டிரஸ்டியாக உங்களை ஆக்கியிருக்கிறார். நீங்களோ உடல்-மனம்-செல்வம் அனைத்தையும் கொடுத்து விட்டீர்கள் இல்லையா? இப்போது உங்களுடையதோ இல்லை. எனது எனச் சொல்வீர்களா அல்லது உனது எனச் சொல்வீர்களா? ஆக, டிரஸ்டி தன்மை தானாகவே நஷ்டோமோகா ஆக்கி விடும், அதாவது தூய்மை மற்றும் பவித்திரதாவைத் தனக்குள் கொண்டு வருகிறது. மோகத்தால் தூய்மை கிடையாது, ஆனால் பாபா சேவை கொடுத்துள்ளார் -- அந்த மாதிரி புரிந்து கொண்டு உடலைத் தூய்மையாக, பவித்திரமாக வைத்திருக்கிறீர்கள் இல்லையா? அல்லது எப்படி வருகிறதோ, அப்படி நடத்திக் கொண்டிருக்கிறீர்களா? தூய்மையும் ஆன்மிகத்தின் அடையாள மாகும்.

அதே போலவே மனதின் தூய்மை அல்லது பவித்திரதாவினுடைய சதவிகிதத்தையும் பாருங்கள். நாள் முழுவதிலும் எந்த விதமான அசுத்த சங்கல்பமும் மனதில் நடைபெற்றாலோ இதை சம்பூர்ண பவித்திரதா எனச் சொல்ல மாட்டார்கள். மனதிற்காக பாப்தாதாவின் வழிகாட்டுதல் (டைரக்ஷன்) - மனதை என்னிடத்தில் ஈடுபடுத்துங்கள் அல்லது உலக சேவையில் ஈடுபடுத்துங்கள். மன்மனாபவ என்ற மந்திரம் சதா ஸ்மிருதியில் இருக்கட்டும். இதைத் தான் மனதின் தூய்மை அல்லது பவித்திரதா எனச் சொல்வது. வேறு எந்தப் பக்கமாவது மனம் அலைகிறதென்றால், அலைவது என்பது தூய்மையற்ற நிலையாகும். இந்த விதி மூலம் சோதித்துப் பாருங்கள் - எத்தனை சதவிகிதத்தில் தூய்மை தாரணை ஆயிற்று? விஸ்தாரத்தையோ அறிவீர்கள் இல்லையா?

மூன்றாவது விஷயம் - இதயத்தின் தூய்மை. இதையும் நீங்கள் அறிவீர்கள் - உண்மை தான் தூய்மை. தனது சுய முன்னேற்றத்திற்கான எந்த ஒரு முயற்சியாயினும், எப்படிப்பட்ட முயற்சி யாயினும் அதை உண்மையாக (உள்ளது உள்ளபடி) பாபாவின் முன்னால் வைக்க வேண்டும். ஆக, ஒன்று - தனது புருஷார்த்தத்தின் தூய்மை. இரண்டாவது - சேவை செய்யும் போது உண்மையான உள்ளத்துடன் எது வரை சேவை செய்து கொண்டிருக் கிறேன் - இதனுடைய தூய்மை. எந்த ஒரு சுய நலத்துடனாவது சேவை செய்கிறீர்கள் என்றால் அதை உண்மையான சேவை எனச் சொல்ல மாட்டார்கள். ஆக, சேவையிலும் உண்மை - தூய்மை எது வரை உள்ளது? சிலர் யோசிக்கின்றனர் - சேவையோ செய்து தான் ஆக வேண்டும் என்று. எப்படி லௌகிக அரசாங்கத்தின் கடமை உள்ளது - உண்மையான உள்ளத்தோடு சேவை செய்தாலும் சரி, நிர்பந்தத்திற்காக சேவை செய்தாலும் சரி, கவனக்குறைவோடு சேவை செய்தாலும் சரி, செய்ய வேண்டியதாக உள்ளது இல்லையா? எப்படியாவது 8 மணி நேரத்தைப் போக்கியாக வேண்டும். அதே போல் இந்த சர்வசக்தி நிறைந்த (ஆல்மைட்டி) அரசாங்கத்தின் மூலமாகக் கடமை கிடைத்துள்ளது என்பதைப் புரிந்து கொண்டு சேவை செய்தால் அது உண்மையான சேவை எனச்

சொல்லப்பட மாட்டாது. கடமை மட்டும் இல்லை, ஆனால் பிராமண ஆத்மாக்களின் உண்மையான சம்ஸ்காரம் தான் சேவையாகும். ஆக, சம்ஸ்காரம் தானாகவே உண்மையான சேவை இன்றி இருக்க விடாது. ஆகவே அந்த மாதிரி சோதித்துப் பாருங்கள் - உண்மையான உள்ளத்தோடு, அதாவது பிராமண வாழ்க்கையின் இயல்பான சம்ஸ்காரத்தோடு எத்தனை சதவிகிதம் சேவை செய்தோம்? இத்தனை மேளாக்கள் நடத்தினோம், ஆனால் தூய்மை மற்றும் பவித்திரதாவின் சதவிகிதம் எவ்வளவு இருந்தது? கடமை இல்லை, ஆனால் உண்மையான சம்ஸ்காரம், சுய தர்மம், சுய கர்மம்.

நாலாவது விஷயம் - சம்பந்தத்தில் தூய்மை. இதன் சார ரூபத்தில் இதை சோதித்துப் பாருங்கள் -- திருப்தி என்ற தூய்மை எத்தனை சதவிகிதத்தில் உள்ளது? நாள் முழுவதும் பலவித ஆத்மாக் களோடு சம்பந்தம் உள்ளது. மூன்று விதமான சம்பந்தத்தில் வருகிறீர்கள். ஒன்று - பிராமணப் பரிவாரத்தினுடையது. இரண்டாவது - வந்துள்ள மாணவ ஆத்மாக்களினுடையது. மூன்றாவது - லௌகிகப் பரிவாரத்தினுடையது. மூன்று சம்பந்தங் களிலும் நாள் முழுவதிலும் தனது திருப்தி மற்றும் வரக்கூடிய மற்ற ஆத்மாக்களின் திருப்தியினுடைய சதவிகிதம் எவ்வளவு இருந்தது? திருப்தியின் அடையாளம் தானும் மனதால் லேசாகவும் குஷியாகவும் இருப்பீர்கள் மற்றும் மற்றவர்களும் குஷியடைவார்கள். அதிருப்தியின் அடையாளம் - தானும் மனதால் பாரமாக இருப்பார்கள். உண்மையான புருஷார்த்தி என்றால் விரும்பாமலே கூட அடிக்கடி இந்த சங்கல்பம் வந்து கொண்டிருக்கும் - இது போல் பேசாதிருந்தால், இது போல் செய்யாதிருந்தால் நன்றாக இருந்திருக்கும். இதைப் பேசினோம், இதைச் செய்தோம் -- என்று இது போல் வந்து கொண்டே இருக்கும். கவனக்குறைவான புருஷார்த்திக்கு இது கூட வராது. ஆக, இந்தச் சுமை குஷியாக இருக்க விடாது. லேசாக இருக்க விடாது. சம்பந்தத்தின் தூய்மை என்றால் திருப்தி. இது தான் சம்பந்தத்தின் உண்மை மற்றும் மாசற்ற தன்மை. எனவே நீங்கள் சொல்கிறீர்கள் உண்மை என்றால் நடனம் - அதாவது உண்மையானவர்கள் சதா குஷியில் நடனமாடிக் கொண்டிருப்பார்கள். ஆகவே கேட்டீர்களா, புனித அன்னப்பறவை பற்றிய விளக்கவுரை? சத்தியதாவின் தூய்மை இல்லை என்றால் நீங்கள் வெறும் அன்னப்பறவை தானே தவிர புனித அன்னப்பறவை இல்லை. ஆகவே சோதித்துப் பாருங்கள் - சம்பன்னம் மற்றும் சம்பூர்ணத்தின் மகிமை என்ன உள்ளதோ, அவ்வாறு எது வரை ஆகியிருக்கிறீர்கள்? டிராமாவின் படி இன்று கூட இந்த சரீரத்தின் கணக்கு-வழக்கு முடிந்து போகுமானால் எத்தனை சதவிகிதத்தில் பாஸாவீர்கள்? அல்லது டிராமாவுக்குச் சொல்வீர்களா -- கொஞ்ச நேரம் நில் என்று? மிகவும் சிறியவர்களெல்லாம் போக மாட்டார்கள் என்று யோசித்துக் கொண்டு நீங்கள் அமர்ந்திருக்கவில்லையே? எவர்-ரெடி என்பதன் அர்த்தம் என்ன? சமயத்திற்காகக் காத்திருக்கவில்லையே - இன்னும் 10-11 வருடங்களோ இருக்கின்றன என்று? அதிகமாக 2000 என்ற கணக்கை யோசிக்கின்றனர். ஆனால் சிருஷ்டியின் விநாசத்தின் விஷயம் வேறு. தன்னை எவர்-ரெடியாக வைத்திருப்பது வேறு விஷயம். அதனால் இதை அதனுடன் ஒப்பிடக் கூடாது. வெவ்வேறு ஆத்மாக்களுக்கு வெவ்வேறு பார்ட் உள்ளது. அதனால் இப்படி யோசிக்காதீர்கள் - எனக்கு அட்வான்ஸ் பார்ட்டியிலோ இல்லை, எனக்கு விநாசத்திற்குப் பிறகும் பார்ட் இருக்கும் என்று. எந்த ஆத்மாக்களுக்கோ உள்ளது. ஆனால் நான் எவர்-ரெடியாக இருப்பேன். இல்லையென்றால்

கவனக்குறைவின் அம்சம் வெளிப்பட்டு விடும். எவர்-ரெடியாக இருங்கள், பிறகு 20 வருடங்கள் வாழ்ந்திருந்தாலும் எந்த ஒரு தடையும் கிடையாது. ஆனால் அந்த மாதிரி ஆதாரத்தில் இருக்கக் கூடாது. இதைத் தான் புனித அன்னப்பறவை எனச் சொல்வது. ஞானக்கடலின் கரை மீது வந்திருக்கிறீர்கள் இல்லையா? ஆக, இன்று புனித அன்னப்பறவையின் தூய்மை பற்றிக் கேட்டீர்கள். பிறகு விசேஷதாவைச் சொல்வோம்.

டீச்சர்களுக்கு சோதித்துப் பார்க்க வருகிறது இல்லையா? டீச்சர்களுக்கு விசேஷமாக சமர்ப்பண மாவதற்கான பாக்கியம் கிடைத்துள்ளது. இல்லறத்தில் இருப்பவர்கள் கூட மனதால் சமர்ப்பண மானவர்கள் தாம். பிறகும் கூட டீச்சர்களுக்கு விசேஷ பாக்கியம் உள்ளது. வேலையே நினைவு மற்றும் சேவையினுடையது தான். உணவு சமைத்தாலும் சரி, துணி துவைத்தாலும் சரி, அதுவும் யக்ஞ சேவை தான். அவர்களும் அலௌகிக வாழ்க்கைக்கான சேவை செய்கிறார்கள். இல்லற வாசிகள் இரண்டு பக்கமும் பராமரிக்க வேண்டி உள்ளது. உங்களுக்கோ ஒரு வேலை தான் இல்லையா? இரட்டை வேலையோ இல்லை தானே? யார் உண்மை மற்றும் தூய்மையுடன் பாபா மற்றும் சேவையில் சதா ஈடுபட்டிருக்கிறார்களோ, அவர்கள் வேறு எந்த முயற்சியும் செய்ய வேண்டிய தேவை இருக்காது. தகுதியான டீச்சரின் பண்டாரா (சமையலறை) மற்றும் பண்டாரி (உண்டியல்) சதா நிரம்பியிருக்கும் என்று சொல்லப் பட்டுள்ளது. அடுத்த மாதம் எப்படி நடக்கும், மேளா எப்படி நடைபெறும் என்று கவலைப்பட வேண்டியது இருக்காது, சேவையுடன் கூடவே சாதனங்கள் தாமாகவே கிடைக்கும். ஆன்மிகக் கவர்ச்சியானது சேவை மற்றும் சேவாகேந்திரங் களைத் தானாகவே அதிகரித்துக் கொண்டிருக்கிறது. மாணவர்கள் ஏன் அதிகரிக்க வில்லை, வந்தவர்கள் ஏன் தங்குவதில்லை, ஏன் சென்று விடுகின்றனர் எப்போது இது போல் அதிகம் யோசிக் கிறீர்களோ, அப்போது மாணவர்கள் தங்குவதில்லை. யோகயுக்த் ஆகி, ஆன்மிகத்துடன் வரவழைப் பீர்களானால் மாணவர்கள் தாமாகவே அதிகரிப்பார்கள். அது போல் நடக்கிறது இல்லையா? ஆகவே மனதை சதா லேசாக வையுங்கள். எந்த விதமான சுமையும் இருக்கக் கூடாது. எந்த விதமான சுமை இருந்தாலும், அது தன்னுடையதோ, சேவையினுடையதோ, சேவையில் துணை யாக இருப்பவர்களுடையதோ, எதுவாக இருந்தாலும் பறக்க விடாது - சேவையும் உயர்ந்ததாக எழாது. அதனால் உள்ளம் சதா தூய்மையாக இருந்தால் மனதின் ஆசைகள் அனைத்தும் தாமாகவே நிறைவேறி விடும் என்பதை மனதில் வையுங்கள். பிராப்திகள் உங்களுக்கு முன்னால் தாமாகவே வரும். என்ன கேட்டீர்கள்? அனைத்து ஆன்மிகப் பிராப்திகளுமே பிராமணர்களுக்காகத் தான் எனும் போது அவை வேறெங்கே போகும்? உரிமையே உங்களுடையது தான். உங்களது உரிமையை யாராலும் அபகரிக்க முடியாது. நல்லது.

புனித அன்னப்பறவைகள் அனைவருக்கும், நாலாபுறம் உள்ள உண்மையான தலைவரைத் திருப்திப் படுத்தக் கூடிய, உண்மையான மனம் கொண்ட சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா தன்னை எவர்-ரெடியாக வைத்திருக்கக் கூடிய நம்பர் ஒன் குழந்தைகளுக்கு, சதா தன்னை மகிமைக்குரிய சம்பூர்ண சம்பன்னம் ஆக்கக் கூடிய, பாபாவின் சமீபமான குழந்தைகளுக்கு, சதா தன்னை விலைமதிக்க முடியாத வைரத்துக்கு சமமாக அனுபவம் செய்யக்கூடிய அனுபவி

ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

மகாராஷ்ட்ரா குரூப்புடன் பாப்தாதாவின் சந்திப்பு

சதா நலமாக இருக்கிறீர்களா? நலமாக இருத்தல் என்றால் நிறைவாகவும் முழுமையாகவும் இருப்பது. நலமாக இருத்தல் என்பது தனக்கும் பிரியமானதாக, மற்றவர்களுக்கும் பிரியமானதாக உள்ளது. எங்கே நலமான நிலைமை இல்லையோ, அது முள் நிறைந்த காடு எனப்படும். ஆக, உங்கள் அனைவரின் வாழ்க்கை அனைத்து நலன்களும் நிறைந்ததாக ஆகியிருக்கிறது. மற்றும் நடத்தை என்னவாக ஆகியிருக்கிறது? பறக்கும் கலை உள்ள ஃபரிஸ்தாக்களின் நடத்தையாக ஆகி விட்டது. ஆக, நிலைமையும் நலமாக உள்ளது, நடத்தையும் நன்றாக உள்ளது. உலக மனிதர்கள் சந்திக்கின்றனர் என்றால் சேமநலம் விசாரிக்கின்றனர் இல்லையா? ஆக, உங்களது சேமநலம் என்னவாக உள்ளது? நிலைமை நலம் நிறைந்ததாக உள்ளது. நடத்தை ஃபரிஸ்தாக்களின் நடத்தையாக உள்ளது. இரண்டுமே நன்றாக உள்ளன இல்லையா? சேமநலத்தில் எந்த ஒரு முள்ளும் வராது. முதலில் முட்கள் நிறைந்த காட்டில் வாழ்க்கை இருந்தது. இப்போது மாறி விட்டது. இப்போது மலர்களின் சேமநலத்தில் வந்து விட்டீர்கள். சதா வாழ்க்கையில் தெய்விக குணங்களின் பூந்தோட்டம் உள்ளது. தெய்விக குணங்களின் பூச்செண்டு சித்திரத்தை உருவாக்கு கிறீர்கள் இல்லையா? அது நீங்கள் தாமா அல்லது வேறு யாராவது இருக்கிறார்களா? முட்களின் செண்டு ஒரு போதும் உருவாக்கப் படுவது இல்லை. பூக்களால் தான் செண்டு உருவாக்கப்படுகிறது. இலைகள் மட்டுமே இருக்குமானால் பூச்செண்டு சரி இல்லை என்பார்கள். ஆக, நீங்கள் சுயம் தெய்வீக குணங்களின் பூச்செண்டாக, அதாவது மகிழ்ச்சி நிறைந்தவராக, சேம நலமாகவே ஆகி விட்டீர்கள். யார் உங்கள் தொடர்பில் வந்தாலும் அவர்களுக்கு தெய்வீக குணங்களின் நறுமணம் வந்து கொண்டே இருக்கும். மேலும் மகிழ்ச்சி நலம் நிறைந்த நிலையினைப் பார்த்து மகிழ்ச்சி யடைவார்கள். சக்தியின் அனுபவமும் அடைவார்கள். அதனால் இப்போது டாக்டர்களும் சொல்கிறார்கள் -- பூந்தோட்டத்தில் போய் நடைப்பயிற்சி செய்யுங்கள் என்று. ஆக, நலமாக இருப்பவர்கள் மற்றவர்களையும் சக்திசாலி ஆக்குவார்கள், மேலும் குஷியிலும் கொண்டு வருவார்கள். எனவே நீங்கள் சொல்கிறீர்கள் -- நாங்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கிறோம். சவால் விடவும் செய்கிறீர்கள் - யாராவது சதா மகிழ்ச்சி நிறைந்தவர் ஆகவேண்டுமானால் எங்களிடம் வாருங்கள். உங்கள் அனைவர்க்கும் தந்தையை நினைவு படுத்துவோம். அப்போது சதா ஆரோக்கியமானவர், சதா செல்வம் நிறைந்தவர், சதா மகிழ்ச்சியானவர் -- இது உங்களின் பிறப்புரிமை. சரீரம் நோய்வாய்ப் பட்டிருந்தாலும் சரி, மனம் நலமாக உள்ளது இல்லையா? மனம் குஷியாக உள்ளது என்றால் உலகமே குஷியாக இருக்கும். மனம் நோயில் இருந்தால் முகமே வெளிறிப் போகும். மனம் சரியாக இருந்தால் உடல் நோயும் கூட அனுபவமாகாது. அப்படித் தான் இல்லையா? ஏனென்றால் உங்களிடம் குஷி என்ற டானிக் நிறைய உள்ளது. மருந்து நல்லதாக இருந்தால் நோய் ஓடிப்போகும். உங்களிடம் உள்ள குஷியின் டானிக் அந்த நோயை விரட்டி விடும், மறக்கடித்து விடும். ஆக, மனம் குஷியாக இருந்தால் உலகம் குஷியாக இருக்கும், வாழ்க்கை குஷியாக இருக்கும். ஆகவே எவர்-ஹெல்தியாகவும் இருக்கிறீர்கள், வெல்தியாகவும் இருக் கிறீர்கள், ஹேப்பியாகவும் இருக்கிறீர்கள். எப்போது நீங்கள் அவ்வாறு இருக்கிறீர்களோ, அப்போது மற்றவர் களுக்கும்

சவால் விட முடியும். இல்லையென்றால் சவால் விட முடியாது. தன்னைப் பார்த்து மற்றவர்கள் மீது இரக்கம் வருகிறது. ஏனென்றால் தன்னுடைய பரிவாரம் இல்லையா? எந்த ஆத்மாக்களாக இருந்தாலும் சரி, அனைவரும் ஒரே பரிவாரத்தைச் சேர்ந்தவர்கள் தாம். யாரைப் பார்த்தாலும் உணர்வீர்கள் - இவர்கள் நம்முடைய சகோதரர்கள், நம்முடைய குடும்பத் தினர். பரிவாரத்திலும் கூட சிலர் நெருங்கியவர்களாக உள்ளனர், சிலர் தூரத்தவராக உள்ளனர். ஆனாலும் பரிவாரத்தினர் என்று தான் சொல்வார்கள் இல்லையா? எப்படி பாபா இரக்க மனம் உள்ளவர். பாபாவிடம் இதைத் தான் வேண்டுகின்றனர் -- கிருபை செய்யுங்கள், இரக்கம் வையுங்கள். ஆக, நீங்களும் கூட கிருபை செய்வீர்கள், இரக்கம் வைப்பீர்கள் இல்லையா? ஏனென்றால் பாபாவுக்கு சமமாக நிமித்தமாகி இருக்கிறீர்கள். பிராமண ஆத்மாவுக்கு எந்த ஓர் ஆத்மா மீதும் வெறுப்பு வர முடியாது. இரக்கம் வரும், வெறுப்பு வராது. ஏனென்றால் உங்களுக்குத் தெரியும், கம்சனாக இருந்தாலும், ஜராசந்தியாக இருந்தாலும், இராவணனாக இருந்தாலும் - யாராக இருந்தாலும் சரி, பிறகும் கூட இரக்க மனம் கொண்ட தந்தையின் குழந்தைகள் வெறுப்புக் கொள்ள மாட்டார்கள். மாற்றத்திற்கான பாவனை வைப்பார்கள், நன்மையின் பாவனை வைப்பார்கள். பிறகும் கூட தங்களின் பரிவாரத்தைச் சேர்ந்தவர்கள், வேறு (மாயா) வசமாக உள்ளனர். வேறு வசமாக இருப்பவர்கள் மீது ஒரு போதும் வெறுப்பு வராது. அனைவரும் மாயா வசமாக உள்ளனர். ஆகவே வேறு வசமாக இருப்பவர் மீது தயை வரும், இரக்கம் வரும். எங்கே வெறுப்பு வராதோ, அங்கே கோபமும் வராது. எப்போது வெறுப்பு வருமோ, அப்போது ஆவேசமும் வரும், கோபமும் வரும். எங்கே இரக்கம் உள்ளதோ, அங்கே சாந்தியின் தானம் கொடுப்பார்கள். வள்ளலின் குழந்தைகள் இல்லையா? ஆகவே சாந்தி கொடுப்பீர்கள் இல்லையா? நல்லது.

வரதானம் : ஞான கஜானா மூலம் முக்தி-ஜீவன்முக்தியின் அனுபவம் செய்யக்கூடிய
சர்வ பந்தனங்களில் இருந்தும் விடுபட்டவர் ஆகுக.

ஞான ரத்தினங்களின் கஜானா அனைத்தையும் விட சிரேஷ்ட கஜானா ஆகும். இந்தக் கஜானா மூலம் இந்தச் சமயம் தான் முக்தி-ஜீவன்முக்தியின் அனுபவம் செய்ய முடியும். யார் துக்கம் அசாந்தியின் அனைத்துக் காரணங்களையும் முடித்து விட்டு, பலப்பல பந்தனங்களின் கயிறு களைத் துண்டித்து, முக்தி-ஜீவன்முக்தியை அனுபவம் செய்கிறார்களோ, அவர்கள் தாம் ஞானம் நிறைந்த ஆத்மாக்கள். அநேக வீண் சங்கல்பங்களில் இருந்து, விகல்பங்களில் இருந்து, விகர்மங் களில் இருந்து சதா விடுபட்டு இருப்பது தான் முக்த் மற்றும் ஜீவன் முக்த் அவஸ்தா ஆகும்.

சுலோகன்: தங்களின் சக்திசாலி உள்ளுணர்வுகள் மூலம் யார் வாயுமண்டலத்தை மாற்றுகிறார்களோ, அவர்கள் தாம் உலகை மாற்றுபவராவார்கள்.